**PRESS RELEASE**

## 25 வது மனித உரிமைகள் பேரவையில் " இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள்" பிரேரணையின் மீதான வாக்கெடுப்பின்போது இந்தியாவின் விளக்கம்

அவைத் தலைவர் அவர்களே

1. இலங்கையில் முப்பதாண்டுகளாக நடைபெற்ற யுத்தம் 2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்ததன்பின் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையானது இலங்கையின் மீது மூன்று தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. யுத்தத்தின் முடிவானது தமிழர்கள் உள்ளிட்ட இலங்கையிலுள்ள அனைத்து ச மூகங்களுக்கும் ஏற்றுக் கொள்ளும்படியான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான அரியதொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது என்பதே எப்பொழுதும் இந்தியாவின் கருத்தாகவுள்ளது.

**2.** இந்தப் பேரவையின் முயற்சிகள் எப்பொழுதும் ஒரு நாட்டின் மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதில் அந்தந்த நாடுகளின் முயற்சிகளுக்குப் பங்களிப்பதாகவே இருக்கவேண்டுமென இந்தியா நம்புகின்றது. மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் அலுவலகத்துடனான தொடர்புகளை இலங்கை தொடர்ந்து பேணுவதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம். மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கமைய உயர் ஸ்தானிகர் தேவையான தொழில் நுட்ப உதவிகளைத் தொடர்ந்து வழங்குவதை நாம் ஊக்குவிக்கின்றோம். அத்துடன் ஐக்கிய நாடுகளின் விசேஷ செயல் முறைகளில் இலங்கையுடனான நெருங்கிய ஈடுபாடுகளுக்கும் நாம் ஆதரவளிக்கின்றோம்.

அத்தகைய மனப்பாங்குடனேயே 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் பேரவையால் நிறைவேற்றப்பட்ட அத்தகைய ஒத்துழைப்புக்கு ஊக்கமளிக்கும் தீர்மானங்களுக்கும் ஆதரவளித்தோம்.

3. சென்ற ஆண்டில் இலங்கையில் குறிப்பிடக்கூடியளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சர்வ தேச சமூகத்திற்கு அளித்திருந்த வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் நிறவேற்றியுள்ளது. அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்ட மும்மொழிக் கொள்கை, தமிழ் மொழியின் உத்தியோக பூர்வ உபயோகத்தை மேம்படுத்தல் மற்றும் வட கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி உட்பட்ட சிலவற்றை அமுல்படுத்தவதற்கும் நடவடிக்கையெடுத்துள்ளது.

4. இந்தப் பேரவையின் 2013ம் ஆண்டுத் தீர்மானத்திற்கமைவான உயர் ஸ்தானிகரின் அறிக்கை மீள் கட்டமைப்பு, மீள் குடியேற்றம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளிற் சிலவற்றின் அமுலாக்கம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. அதே நேரத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் மீறல்கள் சம்பந்தமாக நம்பகத்தன்மையும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்த இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்றும் அந்த அறிக்கையிற் குறிப்பட்டுள்ளது.

5. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கத்தின் மையமாக இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்பக்கூறல் ஆகியவை அமைந்துள்ளன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் அதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியனவும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கான அரியவொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதென்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும். காணமற்போனோர், தடுப்புக் காவலிலுள்ளோர், உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்தல், இராணுவத்திடமுள்ள தனிப்பட்டோரின் காணிகளை மீள ஒப்படைத்தல், வட மாகாணத்தில் குடிமக்கள் வாழும் இடங்களிலிருந்து இராணுவத்தை அகற்றல் போன்றவை உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகள் யாவற்றினதும் தாமதமற்ற செயலாற்றலுடனான அமுலாக்கத்தை இந்தியா வேண்டிநிற்கின்றது.

6. முன்னர் கூறியபடி 2013 செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற வட மாகாண சபைக்கான தேர்தல் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். எனினும் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக இன்னும் அர்த்த புஷ்டியான நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்திளால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்துடன் பரந்த அடிப்படையுடனான, யாவுமுள்ளடங்கலான, அர்த்தபுஷ்டியுடனான உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும். இலங்கை அரசியல் சாசனத்தின் 13வது திருத்தத்தை முழுதாக அமுல் படுத்துவதன் மூலமான அதிகாரப் பரவலாக்கல் உள்ளிட்ட இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டுமென நாம் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவைத் தலைவர் அவர்களே,

7. ஆயிரக்கணக்கான வருடங்கள் தொடர்புடைய எமது நெருங்கிய அயலவர் என்ற முறையில் இலங்கையில் ஏற்படும் சம்பவங்கள் பற்றி நாம் வாளாவிருக்கமுடியாது. ஆயுதப் போர் முடிவுக்கு வந்த காலத்திலிருந்து இலங்கையில் நிவாரணம், மீள்குடியேற்றம். புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானப்பணிகளில் இந்தியா பாரிய அளவில் ஈடுபட்டுள்ளது. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரை மீள் குடியேற்றம் செய்தல், கண்ணிவெடியகற்றல், கல்வி, தொடர்பாடல், ஜீவனோபாய புனரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் நாம் பாரியளவில் இலங்கைக்கு உதவி புரிந்துள்ளோம். இவை வட மற்றும் கீழ் மாகாணங்கள் இயல்பு நிலைக்குத்திரும்புவதில் பெரும் பங்கு வகித்துள்ளன.

8. இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றி விசாரித்து. மதிப்பிட்டு, மற்றும் கண்காணிக்குமாறு மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்தைக் கேட்பது, இந்தப் பிரேரணை ஏற்கெனவே இந்த விவகாரங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றத்தை அலட்சியம் செய்வதாகவும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையேயுள்ள பேரவையின் விசேட நடைமுறைகள் பற்றிய ஒத்துழைப்பை இடருக்குள்ளாக்குவதாகவும் அமைகின்றது. மற்றும், இலங்கை அரசாங்கத்தையும் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தையும் ஒரே நேரத்தில் விசாரணைகள்

நடத்தக் கோருவது ஒத்திசைவில்லாததும் செயல் முறைக்கொவ்வாததுமாகும்.

9. தன்முனைப்பு வாய்ந்த தேசீயக் கட்டமைப்பு மூலம் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கான செயற்பாடுகளைக் கொண்டிருப்புது ஒவ்வொரு நாட்டிற்கும் இன்றியமையாததென இந்தியா நம்புகின்றது. எனவே இந்தப் பேரவையின் முயற்சிகளானது இலங்கை அரசாங்கத்தை, மனித உரிமை மீறல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் யாவற்றின் மீதும் பரந்த அளவிலான. சுயாதீனமான, நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணைகளைத் தேசிய விசாரணைக் கட்டமைப்பகள் மூலம் முன்னெடுப்பதற்குத் தூண்டுவனவாகவும். குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவனவாகவும் அமையவேண்டும். இலங்கைக்குத் தேவையான உதவிகள் யாவும் ஒத்துழைப்புடனும் சேர்ந்து செயலாற்றும் முறையிலானதாகவும் அமையவேண்டும்.

10. ஒரு நாட்டின் இறைமையைப் பாதிப்படையச்செய்யும் விதத்தில் பலவந்தமான தலையீட்டு அணுகுமுறையைக் கையாள்வது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துமென்பதே இந்தியாவின் உறுதியான நம்பிக்கை. ஆக்கபூர்வமான சர்வதேசப் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒத்துழைப்புக்கான விதிமுறைகளின் அடிப்படையிலிருந்து விலகிச்செல்லுதலானது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான இந்தப் பேரவையின் முயற்சிகளைப் பங்கமடையச் செய்வதாகும். அத்துடன் ஒரு நாட்டின் மனித உரிமைப் பாதுகாப்பை கண்காணிப்புச்செய்யும் கட்டுப்பாடற்ற உத்தரவுடனான புறஞ்சார் விசாரணைக் கட்டமைப்பானது 2006ம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தோற்றுவிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவையின் தீர்மானம் 60/251, 2011ம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவை மீளாய்வு செய்யும் ஐநாபொச தீர்மானம் 65/281 ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகாது.

11. ஆகவே இத்தீர்மானமானது, அந்த நாட்டின் முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புக்குப் பதில் முட்டுக்கட்டைகளையே ஏற்படுத்தி, எதிர்பாராத விதத்தில் நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்குமென நாம் கவலையடைகிறோம்.

அவைத்தலைவர் அவர்களே.

**12.** இந்தக் காரணங்களுக்காக எமது பிரதிநிதிகள் குழு இத்தீர்மானத்துடன் ஒத்திசைய முடியாததுடன் வாக்களிப்பதிலிருந்தும் விலகிக்கொள்ளுகிறது.

நன்றி

*********

Jaffna
March 27, 2014